# களம் 1: ஆரம்ப தரங்கள்

## சமுதாய பங்கேற்பு தரம் 1: பங்கேற்பு

**கல்வி மறுசீரமைப்புக்களை பகுப்பாய்வு செய்தல், திட்டமிடல், வடிவமைத்தல், நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தலில் செயற்றிறன் மிக்க வகையில், வெளிப்படைத் தன்மையுடன், பாரபட்சமின்றி சமுதாய உறுப்பினர்கள் பங்குபற்றுவர்.**

**பிரதான நடவடிக்கைகள்:**

- கல்வி நடவடிக்கைகளை முன்னுரிமைப்படுத்தல் மற்றும் திட்டமிடலில் சமுதாய உறுப்பினர்கள் செயற்றிறனுடன் பங்குபற்றுவர்.
- சமுதாய கல்வி குழுக்களில் இலகுவில் பாதிக்கப்படக் கூடிய குழுக்கள் அனைத்தும் பிரதிநிதித்துவம் வகித்தல்.
- கல்வி நடவடிக்கை திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தலின் அனைத்து நிலைகளிலும் சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் செயற்றிறனுடன் பங்குபற்றல்.
- கல்வி பகுப்பாய்வுகள் மற்றும் அனர்த்த அபாயக் குறைப்பு நடவடிக்கைகளிலும், முரண்பாடு தணித்தல் நடவடிக்கைகளிலும் பரந்தளவிலான சமுதாய உறுப்பினர்கள் பங்குபற்றுவர்.
- சமுதாய உறுப்பினர்களின் இயலுமையை கட்டியெழுப்பலில் சந்தர்ப்பங்கள் கிடைக்கக் கூடியதாக இருத்தல்.

**வழிகாட்டல் குறிப்புக்கள்:**

1. கல்வி மறுசீரமைப்பின் அனைத்து நிலைகளிலும் உள்ளடக்கமான சமுதாய பங்கேற்பு.
2. கற்பவர்கள் அனைவரதும் தேவைகளையும், உரிமைகளையும், சமுதாய கல்விக் குழு அடையாளம் காணல் மற்றும் கண்டறிதல்.
3. சமுதாய கல்வி குழு உறுப்பினர்களுக்கான தெளிவாக விளக்கப்பட்ட வகிபாகங்கள் மற்றும் பொறுப்புக்கள்.
4. சமுதாயம்சார் உள்ளூர் கல்வி செயற்றிட்டம்.
5. கல்வி நடவடிக்கைகளில் சிறுவர்கள் மற்றும் இளைஞர்களைப் பங்குபற்றச் செய்தல்.
6. கல்வி நிகழ்ச்சிகளை மதிப்பீடு செய்வதற்கு பயன்படுத்தப்படும் சமூக ஆய்வுகள்.
7. மக்களும், நிறுவனங்களும் தமது இலக்குகளை எட்டுவதற்கு உதவும் வகையில் இயலுமையை கட்டியெழுப்பல்.

## சமுதாய பங்கேற்பு தரம் 2: வளங்கள்

**சமுதாய வளங்கள் அடையாளம் காணப்பட்டு, அணி திரட்டப்பட்டு, வயதுக்கு பொருத்தமான கற்றல் சந்தர்ப்பங்களை நடைமுறைப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும்.**

**பிரதான நடவடிக்கைகள்:**

- தரமான கல்வி கிடைக்கச் செய்வது வலுப்படுத்தப்படுவதற்கு உள்ளூர் வளங்களை அடையாளம் காணல் மற்றும் அணி திரட்டல்.
- கல்வி நிகழ்ச்சிகளை வடிவமைக்கும் போது தற்போது கிடைக்கக் கூடியதாக உள்ள இயலுமைகளை அதிகளவில் பயன்படுத்தல்.
- அனர்த்த அபாயக் குறைப்பு மற்றும் முரண்பாடு தணித்தலை உள்ளடக்கியதான கல்வி.

**வழிகாட்டல் குறிப்புக்கள்:**

1. கல்வி மறுசீரமைப்புக்களை வடிவமைப்பதற்கும், திட்டமிடுவதற்கும் பயன்படுத்தப்படும் சமுதாய வளங்கள்.
2. இலகுவில் பாதிக்கப்படக் கூடிய சிறுவர்களினதும், இளைஞர்களினதும் அணுகும் வசதியையும், பாதுகாப்பினையும் மேம்படுத்தல்.
3. கல்வி நிபுணர்களுக்கான வகிபாகங்கள், பொறுப்புக்கள் தொடர்பான பயிற்சிகள் நீண்ட காலத்திற்கானதாக தயாரிக்கப்படல் வேண்டும்.
4. சமுதாய பங்களிப்புக்களை அங்கீகரித்தல்.
5. அனர்த்த அபாயக் குறைப்பு மற்றும் முரண்பாடு தணித்தலுக்கான கல்வியானது, உள்ளூர் இயலுமை, எதிர்கொள்ளும் தந்திரோபாயங்களின் அடிப்படையில் தயாரிக்கப்படல் வேண்டும்.

# ஒருங்கிணைப்பு

## ஒருங்கிணைப்பு தரம் 1: ஒருங்கிணைப்பு

**கல்விக்கான ஒருங்கிணைப்பு பொறியமைப்புக்கள் பொருத்தமான இடத்தில் இருப்பதுடன், தரமான கல்விக்கான அணுகும் வசதியையும், தொடர்ச்சியையும் உறுதி செய்வதற்காக பணியாற்றும் பங்குதாரர்களுக்கு ஆதரவளித்தல்.**

**பிரதான நடவடிக்கைகள்:**

- கல்வி சார் பதிலளிப்புக்களில் தலைமைத்துவ வகிபாகத்தினை கல்வி அதிகாரிகள் உள்வாங்கல்.
- திட்டமிடல், தகவல் முகாமைத்துவம், இயலுமை அபிவிருத்தி, அணி திரட்டல் மற்றும் பரிந்துபேசல் என்பன நிறுவனங்களுக்கு இடையிலான ஒருங்கிணைத்தல் குழுவினால் ஒருங்கிணைக்கப்படல் வேண்டும்.
- கவனம் செலுத்தப்பட்ட கல்வி மட்டங்கள் மற்றும் வகைகளின் அளவு.
- உரிய நேரத்தில், வெளிப்படையாக, சமமான வகையில் ஆதரவளிக்கப்பட்ட கல்வி நடவடிக்கைகள் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட நிதி கட்டமைப்புக்கள்
- தகவல் பரிமாற்றத்திற்கு வெளிப்படையான பொறியமைப்புக்கள் பொருத்தமான இடத்தில் வைக்கப்படல்.
- கல்வி சார் பதிலளிப்புக்களில் இயலுமைகளையும், இடைவெளிகளையும் அடையாளம் காண்பதற்கு முன்னெடுக்கப்படும் மதிப்பீடுகள்.

- பெறுபேறுகளை எட்டுவதற்கு, சமத்துவம், வெளிப்படைத் தன்மை, பொறுப்புடைமை மற்றும் நம்பகத்தன்மை என்பவற்றை பங்குதாரர்கள் பின்பற்றல்.

**வழிகாட்டல் குறிப்புக்கள்:**

1. பரந்தளவிலான பிரதிநிதித்துவத்துடன் நிறுவனங்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு குழு
2. உள்ளடக்கமான மற்றும் வெளிப்படையான வளங்களின் திரட்டல்
3. தகவல் மற்றும் அறிவு முகாமைத்துவம்
4. கல்வி சார் பதிலளிப்புக்களில் இயலுமைகளையும், இடைவெளிகளையும் அடையாளம் காண்பதற்கு இணைந்த மதிப்பீடுகள்.
5. ஒருங்கிணைத்தல் மற்றும் தகவல் பரிமாற்றத்தில் அரசதரப்பினர் மத்தியில் பொறுப்புடைமை.
6. அனைத்து அரசதரப்பினர் மத்தியிலும், பெறுபேறுகள் அடிப்படையிலான அணுகுமுறை

# பகுப்பாய்வு

## ■ *பகுப்பாய்வு தரம் 1: மதிப்பீடு*

**அவசர கால நிலைமையில் உரிய நேரத்தில் முழுமையான, வெளிப்படையான மற்றும் பங்கேற்கும் முறையில் கல்வி மதிப்பீடுகள் முன்னெடுக்கப்படல்.**

**பிரதான நடவடிக்கைகள்:**

- ஆரம்ப துரித கல்வி மதிப்பீட்டினை முன்னெடுத்தல்.
- கல்வித் தேவைகள் மற்றும் நடவடிக்கைகளின் உள்ளூர் கருத்துக்கள் தொடர்பில் தரவு சேகரித்தல்.
- உள்ளூர் இயலுமைகள், வளங்கள் மற்றும் தந்திரோபாயங்களை அடையாளம் காணல்.
- சூழ்நிலை பகுப்பாய்வினை முன்னெடுத்தல்.
- தரவு சேகரிப்பின் வடிவமைப்பில் பாதிக்கப்பட்ட மக்கள் பங்குபற்றல்.
- கல்வித் தேவைகள் மற்றும் வளங்கள் தொடர்பில் முழுமையான மதிப்பீடு
- துறைகள் மற்றும் பங்குதாரர்களை ஒருங்கிணைக்கும் நிறுவனங்களுக்கு இடையிலான ஒருங்கிணைத்தல் குழு.

**வழிகாட்டல் குறிப்புக்கள்:**

1. மதிப்பீட்டு அணி மற்றும் பாதிக்கப்பட்ட மக்கள் தொகையின், பாதுகாப்பு குறித்து கவனம் செலுத்துவதற்கு ஆரம்ப மதிப்பீடுகள் நடத்தப்படும் காலம்.
2. கல்வி சார் பதிலளிப்புக்களில், தொடர்ச்சியான ஆபத்துக்களை மதிப்பீடு செய்யவும், வகைப்படுத்தப்பட்ட தரவுகளை சேகரிக்கும் மதிப்பீடுகள்.
3. சாத்தியமான முரண்பாடு அல்லது அனர்த்தத்திற்கு பொருத்தமான, சம்பந்தப்பட்ட மற்றும் முரண்நிலை அறிதல் சார் கல்வி பதிலளிப்புக்களை உறுதி செய்யும் சூழ்நிலை பகுப்பாய்வு.
4. தரவு உறுதித் தன்மை மற்றும் தரவு பகுப்பாய்வின் முறைகள்
5. இலகுவில் பாதிக்கப்படக் கூடியக் குழுக்கள் மற்றும் கல்வி அதிகாரிகள் உள்ளடங்கலாக மதிப்பீடுகளில் பல்வேறு வகையான பங்குபற்றுனர்கள்.
6. கல்வித் துறை மற்றும் ஏனைய துறைகளிற்குள் ஒத்துழைப்பு.
7. கல்வி மற்றும் உளச்சமூக தேவைகள் தொடர்பான தரவுகள் சேரிக்கப்படல் வேண்டும்.
8. இயலுமான வரையில் விரைவாக மதிப்பீடு முடிவுகள் கிடைக்கக் கூடியதாக இருத்தல்

## ■ *பகுப்பாய்வு தரம் 2: மறுசீரமைப்பு உபாயங்கள்*

**கல்வியில் உள்வாங்கப்படல் சம்பந்தப்பட்ட பதிலளிப்புக்களில், உபாயங்களில், சூழ்நிலை தொடர்பான தெளிவான விளக்கம், கல்வி உரிமைகளுக்கான தடைகள் மற்றும் அந்த தடைகளை எதிர்கொள்வதற்கான உபாயங்கள் என்பன உள்ளடங்கியுள்ளன.**

**பிரதான நடவடிக்கைகள்:**

- மதிப்பீட்டு முடிவுகளை மறுசீரமைப்பு உபாயங்கள் பிரதிபலிக்கின்றன.
- கல்வி சார் பதிலளிப்புக்கள் பாதிக்கப்பட்ட மக்கள் தொகையின் தேவைகளை எட்டுகின்றன.
- பதிலளிப்பு உபாயங்கள் சமுதாயத்திற்கு தீங்கு விளைவிப்பதில்லை.
- ஆரம்ப மதிப்பீடு மற்றும் சூழ்நிலை பகுப்பாய்வின் மூலம் சேகரிக்கப்பட்ட தகவல்கள் தொடர்ச்சியாக புதுப்பிக்கப்படுகின்றன.
- மதிப்பீடு மற்றும் பதிலளிப்பு நடைமுறைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் இயலுமை கட்டியெழுப்பல்.
- கல்வி பதிலளிப்பு தேசிய கல்வி நிகழ்ச்சிகளுக்கு இசைவானதாக இருத்தல்.
- நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் கீழ்நிலை அடிப்படைத் தரவு சேகரித்தல்.

**வழிகாட்டல் குறிப்புக்கள்:**

1. மதிப்பீட்டின் பிரதான கண்டறிதல்கள் தொடர்பான பதிலளிப்பு உபாயங்கள்.
2. தரவு சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வுக்கான இயலுமையை கட்டியெழுப்பல்.
3. “பாதகம் செய்யாமை” இனை உறுதி செய்வதான எத்தனிப்புக்கள்
4. அவசர கால நிலைமைகளின் போது பதிலளிப்பு உபாயங்களை மீட்டல் மற்றும் புதுப்பித்தல்.
5. தரம் மற்றும் அணுகும் வசதிக்கான கல்வி பதிலளிப்புக்களை நிதியுதவியாளர்கள் தொடர்ந்து மீட்டல் செய்வர்.
6. தேசிய கல்வி நிகழ்ச்சிகளை வலுப்படுத்தல்.
7. அனர்த்த அபாயக் குறைப்பு மற்றும் முன்னாயத்த நடவடிக்கைகளை மேம்படுத்தல்.
8. நிறுவன அமைப்பு யாப்புக் கட்டளைகளின் சிக்கல்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளல்.

9. கீழ்நிலை அடிப்படைத் தரவுகள் சேகரிக்கப்படல்.

## ■ பகுப்பாய்வு தரம் 3: கண்காணித்தல்

**கல்வி சார் பதிலளிப்பு நடவடிக்கைகளை தொடர்ச்சியாக கண்காணித்தல் மற்றும் பாதிக்கப்பட்ட மக்கள் தொகையின் அதிகரித்து வரும் கற்றல் தேவைகளை முன்னெடுத்தல்.**

**பிரதான நடவடிக்கைகள்:**

- கல்வி சார் பதிலளிப்பு நடவடிக்கைகளின் கண்காணித்தலுக்கான வினைத்திறன்மிக்க முறைகள்
- கண்காணித்தலின் ஊடாக கற்பவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்தல்.
- இலகுவில் பாதிக்கப்படக் கூடிய மக்களும் கண்காணித்தலில் உள்ளடக்கப்படல்.
- வகைப்படுத்தப்பட்ட கல்வி தரவுகளை தொடர்ச்சியாக சேகரித்தல்.
- தரவு பகுப்பாய்வு செய்யப்படல் மற்றும் பங்குதாரர்களுடன் தொடர்ச்சியாக பகிரப்படல்.

**வழிகாட்டல் குறிப்புக்கள்:**

1. கல்வி நிகழ்ச்சிகளின் விளைவுகள் கண்காணிக்கப்படல்
2. கலாசார ரீதியாக கூருணர்வு மிக்க வகையில் தகவல் சேகரிப்பு நடத்தப்படல் வேண்டும்.
3. கல்வி தரவுகளை முழுமை செய்யும் மற்றும் பகுப்பாய்வு செய்யும் கல்வி முகாமைத்துவ தகவல் முறை.
4. தமது கற்றலின் போதும், அவர்கள் கற்கையை நிறைவு செய்ததன் பின்னரும், கற்பவர்களை கண்காணித்தல்.

## ■ பகுப்பாய்வு தரம் 4: மதிப்பீட்டாய்வு

**கல்வி சார் பதிலளிப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கும், நம்பகத்தன்மையை விரிவாக்கம் செய்வதற்கும் முறைசார் மற்றும் பக்கச்சார்பற்ற மதிப்பீட்டாய்வுகள்.**

**பிரதான நடவடிக்கைகள்:**

- எதிர்கால நடவடிக்கைகளை குறிக்கும் தரவுகளை மதிப்பீட்டாய்வுகள் வெளிப்படுத்தும்.
- மதிப்பீட்டாய்வு நடவடிக்கைகளில் பங்குதாரர்கள் ஈடுபட்டுள்ளனர்.
- பாடங்களும், சிறந்த பயிற்சிகளும் பரந்தளவில் பகிரப்படல்.

**வழிகாட்டல் குறிப்புக்கள்:**

1. கண்காணித்தல் மற்றும் மதிப்பீட்டாய்வுக்கு இடையிலான சிறப்புத் தன்மை.
2. கல்வி மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் மதிப்பீட்டாய்வுகள்.
3. மதிப்பீட்டாய்வின் மூலமாக சம்பந்தப்பட்ட பங்குதாரர்களுக்கு இயலுமை கட்டியெழுப்பல்.
4. மதிப்பீட்டாய்வு முடிவுகள் மற்றும் கற்றப் பாடங்களை பகிரல்.

# தளம் 2: அணுகும் வசதி மற்றும் கற்றல் சூழல்

## ■ அணுகும் வசதி மற்றும் கற்றல் சூழல் தரம் 1: சமமான அணுகும் வசதி

**தரமான மற்றும் பொருத்தமான கல்வி சந்தர்ப்பங்களுக்கும் அனைத்து தனிநபர்களுக்கும் அணுகும் வசதி.**

**பிரதான நடவடிக்கைகள்:**

- பாரபட்சத்தின் காரணமாக கல்விக்கான அணுகும் வசதி மறுக்கப்படாமை
- கற்றல் கட்டமைப்புக்கள் மற்றும் தளங்களுக்கு அனைவருக்குமான அணுகும் வசதி
- அனுமதிக்கான தடைகள் நீக்கப்படல்
- பல வகையான முறைசார் மற்றும் முறைசாரா கல்வி நடவடிக்கைகள் வழங்கப்படல்.
- தரமான மற்றும் பொருத்தமான கல்விக்கான உரிமைகளை உறுதி செய்வதில் உள்ளூர் சமுதாயங்கள் ஈடுபடல்
- கல்வி நடவடிக்கைகளின் தரத்தை உறுதி செய்வதற்கு வளங்களின் கிடைக்கக் கூடியத் தன்மை
- முறைசார் கல்விக்குள் நுழைவதற்கு அல்லது மீள் நுழைவிற்கு கற்பவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படல்
- தங்குவதற்கு இடமளிக்கும் மற்றும் தாய் நாட்டினரால் அங்கீகரிக்கப்பட்ட அகதிகளுக்கான கல்வி நிகழ்ச்சிகள்
- தங்குவதற்கு இடமளிக்கும் மக்கள் தொகைக்கு கல்வி சேவைகள் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தாமலிருத்தல்.

**வழிகாட்டல் குறிப்புக்கள்:**

1. பாரபட்சமின்றி கல்விக்கான அணுகும் வசதியை உறுதி செய்தல்.
2. அனுமதி, நுழைவு மற்றும் மாணவர் தங்கியிருத்தலை அதிகரிப்பதற்கு ஆவணங்களின் தேவைகள் நெகிழ்ச்சியானதாக இருத்தல் வேண்டும்.
3. பல வகையான தரமான கல்வி சந்தர்ப்பங்கள்

4. கற்றல் சந்தர்ப்பங்கள் நெகிழ்வானதாகவும், சூழ்நிலையை உள்வாங்கிக் கொள்ளக் கூடியதாகவும் இருத்தல்.
5. ஆரம்ப மதிப்பீட்டின் அடிப்படையில் உடனடி கல்வி சந்தர்ப்பங்கள்.
6. தரமான மற்றும் பொருத்தமான கல்வி
7. கல்விச் செயற்பாட்டில் சமுதாயமானது செயற்றிறன் மிக்க வகையில் ஈடுபடல்.
8. வளங்களை வழங்குவதற்கான இறுதி பொறுப்பினை தேசிய அதிகார சபைகள் கொண்டுள்ளன.
9. கல்வி வழங்கும் இடங்களை தற்காலிக இருப்பிடங்களாக பயன்படுத்துதலை குறைத்தல்.

## ■ அணுகும் வசதி மற்றும் கற்றல் சூழல் தரம் 2: பாதுகாப்பு மற்றும் நலன்

**கற்றல் சூழல் பாதுகாப்பானதாக இருத்தல், மற்றும் கற்பவர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஏனைய கல்வியியலாளர்களின் பாதுகாப்பை மேம்படுத்துவதுடன், உளச்சமூக நலனையும் மேம்படுத்தல்.**

**பிரதான நடவடிக்கைகள்:**

- கற்றல் சூழலானது பாதுகாப்பு அச்சுறுத்தலிற்கான ஆதாரம் அற்றதாக இருத்தல்.
- ஆதரவளிக்கக் கூடிய கற்றல் சூழலை உருவாக்கும் திறன்களை ஆசிரியர்கள் மற்றும் வேறு கல்வியியலாளர்கள் கொண்டிருத்தல்.
- தாம் சேவை வழங்கும் மக்கள் தொகை வசிக்கும் இடத்திற்கு அருகில் கற்பதற்கான வசதி செய்து கொடுக்கப்படல்.
- அணுகும் வசதிகள் பாதுகாப்பானது மற்றும் அணுகக் கூடியது.
- கற்கும் சூழல் இராணுவ ஆக்கிரமிப்பு மற்றும் தாக்குதல் அற்றதாக இருத்தல்.
- தீர்மானம் எடுத்தலுக்கு சமுதாயம் பங்களித்தல்.
- பாதுகாப்பான கற்றல் சூழல் பேணப்படல்.

**வழிகாட்டல் குறிப்புக்கள்:**

1. பாதுகாப்பான கற்றல் சூழல்
2. உணர்வுசார், உடல்சார் மற்றும் சமூகம்சார் நலனுக்கு உதவும் நடவடிக்கைகள்
3. ஆசிரியர்கள் மற்றும் கற்பவர்களுக்கு ஆபத்துக்கள் குறித்து விளக்கப்படுவதுடன், பாதுகாக்கப்படல்.
4. பால்நிலை சார் வன்முறைகளை எதிர்கொள்ளல் மற்றும் தடுத்தல்.
5. உள்ளூர் மற்றும் தேசிய தரங்களின் அடிப்படையில், கற்பவர்கள் மற்றும் கற்கும் இடங்களுக்கு இடையிலான தூரம் நிர்ணயிக்கப்படல் வேண்டும்.
6. பாதுகாப்பான அணுகும் வழிகளை உறுதி செய்வதாக கற்கும் முகவரி அமைதல் வேண்டும்.
7. தாக்குதலில் இருந்து பாதுகாப்பானதாக கல்வி அமைதல்.
8. உளச்சமூக ஆதரவு மற்றும் நலன் குறித்து பயிற்சியளித்தல்.
9. வன்முறையற்ற வகுப்பறை முகாமைத்துவம்
10. கற்றல் சூழலை உருவாக்கல், நிலைத்திருக்கச் செய்தல் மற்றும் பாதுகாத்தலில் சமுதாய பங்கேற்பு
11. அனர்த்த முற்பாதுகாப்பில் ஆசிரியர்கள் மற்றும் வேறு கல்வியியலாளர்களுக்கான பயிற்சி.

## ■ அணுகும் வசதி மற்றும் கற்றல் சூழல் தரம் 3: வசதிகள் மற்றும் சேவைகள்

**கற்பவர்கள், ஆசிரியர்கள் மற்றும் வேறு கல்வியியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் நலனை கல்வி வழங்கும் இடங்கள் மேம்படுத்தல் வேண்டும். அத்துடன், சுகாதார, போஷாக்கு, உளச்சமூக மற்றும் பாதுகாப்பு சேவைகளுடன் இணைக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.**

**பிரதான நடவடிக்கைகள்:**

- கற்றல் தளங்கள் மற்றும் கட்டமைப்புக்கள் பாதுகாப்பானதாகவும், அணுகக் கூடியதாகவும் இருத்தல்.
- கற்றல் சூழல்கள் அனர்த்த நெகிழ்வு வடிவமைப்பு மற்றும் நிர்மாணம் சார்ந்ததாக இருத்தல்.
- கற்றல் சூழலானது பாதுகாப்பான எல்லைகள் மற்றும் அடையாளங்களைக் கொண்டிருத்தல்.
- கற்றல் தளங்களுக்கு பயன்படுத்தப்படும் பௌதீக கட்டமைப்புக்கள் பொருத்தமானதாக இருத்தல்.
- வகுப்பு கட்டமைப்பு மற்றும் இடவசதி என்பன பங்கேற்பு முறையியல்களை மேம்படுத்துவதாக இருத்தல்.
- இளைஞர்கள் உள்ளடங்களாக சமுதாய உறுப்பினர்கள், கற்றல் சூழலின் நிர்மாணம் மற்றும் நிர்வகிக்கும் செயற்பாடுகளில் பங்கேற்றல்.
- தனிப்பட்ட போஷாக்கிற்கு பாதுகாப்பான குடிநீர் மற்றும் புறச்சுகாதார வசதிகள் வழங்கப்படல்.
- ஆரோக்கிய மற்றும் போஷாக்கு கல்வி மேம்படுத்தப்படல்.
- பாடசாலை சார் சுகாதார மற்றும் போஷாக்குச் சேவைகள் கிடைக்கக் கூடியதாக இருத்தல்.
- சிறுவர் பாதுகாப்பு, சுகாதாரம், போஷாக்கு மற்றும் சமூக, உளச்சமூக சேவைகளுடன் இணைந்ததாக கற்றல் இடங்கள் அமைந்திருத்தல்.

**வழிகாட்டல் குறிப்புக்கள்:**

1. கல்வி வழங்கும் இடம் அமைந்துள்ள பகுதி சமத்துவம் மற்றும் பௌதீக பாதுகாப்பினை மேம்படுத்தல்.
2. கல்வி வழங்கும் இடங்களின், கட்டமைப்பு, வடிவமைப்பு மற்றும் நிர்மாணம் என்பன பாதுகாப்பானதாகவும், உகந்ததாகவும் அமைதல்.
3. கல்வி வழங்கும் இடங்களின் வடிவத்தின் போது, மாற்றுத்திறனாளிகளின் தேவைகளும் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும்.
4. கற்றல் இடங்களின் வடிவமைப்பு மற்றும் பேணல் என்பன பயன்படுத்துனர்களை மனதில் வைத்ததாக அமைதல் வேண்டும்.

5. கற்றல் சூழலுக்கு அருகில் புறச்சுகாதார வசதிகள் கிடைக்கக் கூடியதாக இருத்தல்.
6. கற்றல் சூழலானது போஷாக்கினை மேம்படுத்துவதாகவும், பாதுகாப்பான நீர் வளங்களைக் கொண்டதாகவும் இருத்தல்.
7. பாடசாலைசார் ஆரோக்கிய மற்றும் போஷாக்குச் சேவைகள், கல்வி, போஷாக்கு, ஆரோக்கியம் மற்றும் புறச்சுகாதாரம் என்பவற்றுடன் இணைக்கப்பட்டதாக இருத்தல்.
8. உடல்சார், உளச்சமூக மற்றும் உணர்வுசார் நலனை மேம்படுத்துவதற்கு, உள்ளூர் சேவைகள் மற்றும் குறிப்புதவிகளுக்கான அணுகும் வசதி.

## தளம் 3: கற்பித்தல் மற்றும் கற்றல்

### ■ கற்பித்தல் மற்றும் கற்றல் தரம் 1: பாடவிதானம்

**கற்பவர்களின் குறிப்பிட்ட சூழ்நிலை மற்றும் தேவைகளுக்கு பொருத்தமான முறைசார் மற்றும் முறைசாரா கல்வியை வழங்கும் போது, கலாசார ரீதியான, சமூக ரீதியான மற்றும் மொழி ரீதியான சம்பந்தப்பட்ட பாட விதானங்களை பயன்படுத்தல்.**

**பிரதான நடவடிக்கைகள்:**

- பாடவிதானம் தயாரித்தலில், அரச தரப்பினர் பங்குதாரர்களை ஈடுபடுத்தல்.
- கற்பவர்களின் தேவைகளுக்கு பொருத்தமானதாக ஆவணங்கள் மற்றும் பாடவிதானம்
- அகதிகள் மற்றும் உள்ளூரில் இடம்பெயர்ந்தவர்களிற்காக பயன்படுத்தப்படும் பாடவிதானம் மற்றும் பரீட்சைகள் தாயகம் மற்றும் தங்குவதற்கு இடமளிக்கும் அரசாங்கங்களினால் அங்கீகரிக்கப்படல்.
- அனர்த்த அபாயக் குறைப்பு, சுற்றுச் சூழல் கல்வி மற்றும் முரண்பாட்டு தவிர்ப்பினை பாடவிதானம் கற்பித்தல்.
- அடிப்படைக் கல்வியின் பிரதான திறன்களை பாடவிதானம் உள்ளடக்கல்.
- கற்பவர்களின் உளச்சமூக நலன் மற்றும் பாதுகாப்பு தேவைகளை பாடவிதானம் அடையாளம் காணல்.
- கற்பவர்கள் மற்றும் கற்பிப்பவர்களின் மொழியில் கற்றல் ஆவணங்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் வழங்கப்படல்.
- வேற்றுமை மற்றும் பால்நிலை என்பவற்றுக்கு கூருணர்வு மிக்கதாக பாடவிதானம் மற்றும் அறிவுறுத்தல் ஆவணங்கள் அமைதல்.
- போதிய கற்பித்தல் மற்றும் கற்றல் ஆவணங்கள் வழங்கப்படல்.

**வழிகாட்டல் குறிப்புக்கள்:**

1. பாடவிதானத்தின் வரைவிலக்கணம்
2. சூழ்நிலை, வயது மற்றும் அபிவிருத்தி மட்டங்களிற்கு பொருத்தமான பாடவிதானம்
3. பாடவிதான மீளாய்வு மற்றும் அபிவிருத்திச் செயற்பாடு
4. கற்றல் உள்ளடக்கம் மற்றும் ஆசிரியர் பயிற்சியினை வடிவமைப்பதற்கு முன்னர் அடையாளம் காணப்பட்ட பிரதான திறன்கள்.
5. வாழ்க்கைத் திறன்கள் கற்றல் உள்ளடக்கம் மற்றும் பிரதான அம்சங்கள் என்பன கற்பவர்களுக்கு பொருத்தமானதாகும்.
6. கற்பவர்கள் மற்றும் கற்பிப்பவர்களின் உளச்சமூக தேவைகள், உரிமைகள் மற்றும் அபிவிருத்தி என்பன அடையாளம் காணப்படல்.
7. பங்குதாரர்களின் இணக்கத்திற்கு அமைய அறிவுறுத்தல் வழங்கும் மொழி தீர்மானிக்கப்படல்.
8. கல்வி நடவடிக்கைகளின் வடிவமைப்பு மற்றும் நடைமுறைப்படுத்தலில் பல்வகைத் தன்மை என்பது தொடர்பில் கவனம் செலுத்தப்படல்.
9. உள்ளூரில் கிடைக்கக் கூடியதாக உள்ள கற்றல் சாதனங்கள்.

### ■ கற்பித்தல் மற்றும் கற்றல் தரம் 2: பயிற்சி, தொழில்சார் அபிவிருத்தி மற்றும் ஆதரவு

**தேவைகள் மற்றும் சூழ்நிலைகளுக்கு அமைய கற்பிப்பவர்களும், ஏனைய கல்வியியலாளர்களும் பருவகால, சம்பந்தப்பட்ட மற்றும் கட்டமைக்கப்பட்ட பயிற்சிகளைப் பெறல்.**

**பிரதான நடவடிக்கைகள்:**

- தேவைகளின் அடிப்படையில் ஆசிரியர்களுக்கு கிடைக்கக் கூடியதாக உள்ள பயிற்சி
- சூழ்நிலைக்குப் பொருத்தமான பயிற்சி
- பயிற்சிகள் அதிகாரிகளினால் அங்கீகரிக்கப்படல் மற்றும் அனுமதிக்கப்படல்.
- பயிற்சி கற்கைகளை தரமான பயிற்சியாளர்கள் முன்னெடுத்தல்.
- ஆசிரியர்கள் வினைத்திறன் மிக்க வளவாளர்களாக இருப்பதற்கு பயிற்சிகள் துணை புரியும்.
- முறைசார் மற்றும் முறைசாரா பாடவிதானத்திற்கான அறிவு மற்றும் திறன்களை பயிற்சி உள்ளடக்கியிருத்தல்.

**வழிகாட்டல் குறிப்புக்கள்:**

1. ”கற்பிப்பவர்” என்பதற்கான வரைவிலக்கணம்
2. கல்வி அதிகாரிகளினால் முறைசார் பயிற்சி பாடவிதானம் மற்றும் உள்ளடக்கத்தினை விருத்தி செய்தல்.
3. கல்வி அதிகாரிகளுடன் பயிற்சி ஆதரவு மற்றும் ஒருங்கிணைப்பு.

4. கல்வி அதிகாரிகளினால் பயிற்சி அறிந்து கொள்ளப்படல் மற்றும் ஏற்றுக் கொள்ளப்படல்.
5. விசேட கற்பித்தல் உதவிகளுக்கான தேவைகளை அடையாளம் காண்பதற்கு கற்பிப்பவர்களுக்கு பயிற்சி வழங்கல்.
6. கற்பவர்கள் மற்றும் சமுதாயத்திற்கு எவ்வாறு உதவுவது என கற்பிப்பவர்களுக்கு பயிற்சி வழங்கலானது, எதிர்காலத்தில் அனர்த்தங்கள் ஏற்படுவதனை தடுப்பதுடன், தணிக்கும்.

## ■ கற்பித்தல் மற்றும் கற்றல் தரம் 3: அறிவுறுத்தல் மற்றும் கற்றல் செயற்பாடு

**அறிவுறுத்தலும், கற்றல் செயற்பாடுகளும், கற்பவர்களை பிரதானமாகக் கொண்ட, பங்கேற்பு ரீதியான, உள்ளடக்கமானதாக இருத்தல்.**

**பிரதான நடவடிக்கைகள்:**

- கற்பவர்களின் தேவைகளுக்கு பொருத்தமான கற்பித்தல் முறைகள்.
- கற்பித்தல் திறன்கள் மற்றும் கற்றல் உள்ளடக்கத்தினை புரிந்து கொண்டமையை கற்பிப்பவர்கள் வெளிப்படுத்தல்.
- கற்பவர்கள் அனைவரினதும் தேவைகளை அடையாளப்படுத்தும் அறிவுறுத்தல் மற்றும் கற்றல் செயற்பாடுகள்.
- பயன்படுத்தப்படும் உள்ளடக்கம் மற்றும் கற்பித்தல் முறைகளை பெற்றோர்களும், சமுதாயத் தலைவர்களும் ஏற்றுக் கொள்ளல்.

**வழிகாட்டல் குறிப்புக்கள்:**

1. அனைத்து கற்பவர்களும் செயற்றிறன் மிக்க வகையில் இணைந்துள்ளமையை கற்பிப்பவர்கள் உறுதி செய்தல்.
2. அவசர கால நிலைமைகளில் கல்வியின் முக்கியத்துவம் தொடர்பில் பங்குதாரர்கள், பெற்றோர்கள் மற்றும் சமுதாய உறுப்பினர்களுடன் கலந்துரையாடுவதற்கு கற்பிப்பவர்கள் பயிற்சி பெறல்.
3. சூழ்நிலை மற்றும் கற்றல் தேவைகளுக்கு பொருத்தமானதாக கற்பித்தல் முறைகள் பயன்படுத்தப்படல்.

## ■ கற்பித்தல் மற்றும் கற்றல் தரம் 4: கற்றல் வெளியீடுகளின் மதிப்பீடு

**கற்றல் வெளியீடுகளை மதிப்பீடு செய்வதற்கு மற்றும் சரிபார்த்தலுக்கு பொருத்தமான முறைகள் பயன்படுத்தப்படல்.**

**பிரதான நடவடிக்கைகள்:**

- கற்பவர்களின் தேர்ச்சி தொடர்பான மதிப்பீடு மற்றும் மதிப்பீட்டாய்வு என்பன கற்பித்தல் முறைகளை வெளிப்படுத்தும்.
- வெற்றிகள் அங்கீகரிக்கப்படுவதுடன், பூர்த்தி செய்யப்பட்ட ஆவணம் வழங்கப்படல்.
- தொழில்நுட்ப மற்றும் தொழில் கல்வி நிகழ்ச்சி பட்டதாரிகளின் மதிப்பீடு
- நீதியான மற்றும் நம்பகமான மதிப்பீட்டு மற்றும் மதிப்பீட்டாய்வு முறைகள்
- கற்பவர்களின் எதிர்காலத் தேவைகளுக்கு பொருத்தமான மதிப்பீடுகள்

**வழிகாட்டல் குறிப்புக்கள்:**

1. வினைத்திறன் மிக்க மதிப்பீட்டு மற்றும் மதிப்பீட்டாய்வு முறைகளும், செயற்பாடுகளும்,
2. கல்வி அதிகாரிகளால் அங்கீகரிக்கப்படும் மதிப்பீட்டு முடிவுகள்
3. ஒழுக்கக் கோவையின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட மதிப்பீடு மற்றும் மதிப்பீட்டாய்வு.
4. மதிப்பீட்டு உள்ளடக்கம் மற்றும் செயற்பாட்டின் பொருத்தப்பாடு.

# தளம் 4: கற்பிப்பவர்கள் மற்றும் வேறு கல்வியியலாளர்கள்

## ■ கற்பிப்பவர்கள் மற்றும் வேறு கல்வியியலாளர்கள் தரம் 1: ஆட்சேர்ப்பு மற்றும் தெரிவு

**பல்வகைத் தன்மை மற்றும் சமத்துவத்தினைப் பிரதிபலிக்கும் தெரிவு செய்தல் பிரமாணத்தின் அடிப்படையில், பங்கேற்பு மற்றும் வெளிப்படையான செயற்பாட்டின் ஊடாக பொருத்தமான வகையில் தரமான கற்பிப்பவர்கள் மற்றும் வேறு கல்வியியலாளர்கள் போதிய எண்ணிக்கையில் இணைக்கப்படல்.**

**பிரதான நடவடிக்கைகள்:**

- ஆட்சேர்ப்புக்கு முன்னர் வடிவமைக்கப்பட்ட தெளிவான தொழில் விளக்கங்கள் மற்றும் வழிகாட்டிகள்
- கற்பிப்பவர்கள் மற்றும் வேறு கல்வியியலாளர்களை பிரதிநிதிகள் தெரிவு குழு தெரிவு செய்யும்.
- போதிய எண்ணிக்கையிலான நபர்கள் இணைக்கப்படல் மற்றும் தொழில் வழங்கப்படல்.

**வழிகாட்டல் குறிப்புக்கள்:**

1. தொழில் விபரிப்புக்களின் பிரதான விடயப் பரப்புக்கள்
2. அவசர கால நிலைமையில் கற்பிப்பவர்களின் அனுபவம் அல்லது தகுதிகள்
3. கற்பிப்பவர்களை தெரிவு செய்வதற்கான பிரமாணங்கள்.
4. இயலுமான சந்தர்ப்பத்தில் பரிசோதிக்கப்பட்ட குறிப்புதவிகள்.

5. வகுப்பு அளவில் உள்ளூரில் விளக்கப்பட்ட, யதார்த்தமான எல்லைகள்.

## ■ கற்பிப்பவர்கள் மற்றும் வேறு கல்வியியலாளர்கள் தரம் 2: தொழில் நிபந்தனைகள்

**தெளிவாக விளக்கப்பட்ட தொழில் நிபந்தனைகளை கற்பிப்பவர்களும், வேறு கல்வியியலாளர்களும் கொண்டிருப்பர். அத்துடன், பொருத்தமான கொடுப்பனவும் வழங்கப்படல்.**

**பிரதான நடவடிக்கைகள்:**

- கொடுப்பனவு மற்றும் தொழில் நிபந்தனைகள் என்பன பங்குதாரர்கள் மத்தியில் ஒருங்கிணைக்கப்படல்.
- கொடுப்பனவு மற்றும் தொழில் நிபந்தனைகள் என்பன தொழில் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படல்.
- விதிகள் மற்றும் நிபந்தனைகளை ஒழுங்கமைக்கவும், பேரம் பேசுவதற்கும் ஆசிரியர்கள் மற்றும் வேறு கல்வி நிபுணர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படல் வேண்டும்.
- நன்னடத்தைக் கோவை உகந்ததாக இருத்தல் மற்றும் மதிக்கப்படல்.

**வழிகாட்டல் குறிப்புக்கள்:**

1. தொழில் நிபந்தனைகள் தொழில் ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்படல்.
2. போதிய மற்றும் பொருத்தமான கொடுப்பனவு உகந்த வகையில் நிர்ணயிக்கப்படுவதுடன், விளக்கப்படல்.
3. நன்னடத்தைக் கோவையின் பிரதான அம்சங்கள் ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்படல்.

## ■ கற்பிப்பவர்கள் மற்றும் வேறு கல்வியியலாளர்கள் தரம் 3: ஆதரவு மற்றும் மேற்பார்வை

**கற்பிப்பவர்களும், வேறு கல்வியியலாளர்களும் வினைத்திறன் மிக்க வகையில் செயற்படுவதற்கு ஆதரவு மற்றும் மேற்பார்வை பொறியமைப்புக்கள்.**

**பிரதான நடவடிக்கைகள்:**

- போதிய கற்றல் ஆவணங்கள் மற்றும் வசதிகள் கிடைக்கக் கூடியதாக இருத்தல்.
- தொழில்சார் அபிவிருத்தியானது கற்பிப்பவர்களுக்கு ஊக்கம் மற்றும் ஆதரவிற்கு வழி வகுக்கும்.
- தொடர்ச்சியாக மதிப்பீடு செய்வதற்கும், கற்பிப்பவர்களுக்கு ஆதரவளிப்பதற்கும் மேற்பார்வை உகந்த இடத்தில் இருத்தல்.
- செயற்பாட்டு மதிப்பீட்டாய்வுகள் ஒழுங்காக முன்னெடுக்கப்படல், ஆவணப்படுத்தப்படல் மற்றும் கலந்துரையாடப்படல்.
- கற்பிப்பவர்களின் செயற்பாடு தொடர்பில் மாணவர்களுக்கு பின்னூட்டம் வழங்கல்.
- கற்பிப்பவர்களுக்கு உளச்சமூக ஆதரவு வழங்கல்.

**வழிகாட்டல் குறிப்புக்கள்:**

1. கற்பித்தல், கற்றல் ஆவணங்களும், இட வசதியும் வினைத்திறன் மிக்க கற்பித்தலுக்கு வழி வகுத்தல்.
2. ஆதரவு மற்றும் மேற்பார்வை பொறியமைப்புக்கள், கற்பிப்பவரிற்கான ஊக்கம் மற்றும் தரத்தினை பேணும்.
3. இயலுமை கட்டியெழுப்பல், பயிற்சி வழங்கல் மற்றும் தொழில்சார் அபிவிருத்தி தொடர்பில் கற்பிப்பவர்களுடன் கலந்தாய்வு செய்தல்.
4. ஊழியர் தேர்ச்சி மதிப்பீட்டாய்வுகள் மற்றும் செயற்பாடு
5. மதிப்பீடு மற்றும் மதிப்பீட்டாய்வு செயற்பாட்டில் கற்பவர்களை உள்ளடக்கல்.
6. உளச்சமூக ஆதரவு மற்றும் கற்பிப்பவர்களின் நல்ன்.

# தளம் 5: கல்வி கொள்கை

## ■ கல்வி கொள்கை தரம் 1: சட்டம் மற்றும் கொள்கை உருவாக்கம்

**பாடசாலைகளுக்கான இலவசமான மற்றும் உள்வாங்கப்படுதலுடனான அணுகும் வசதி உள்ளடங்கலாக, தரமான கல்வியின் தொடர்ச்சி மற்றும் மீள்கட்டுமாணத்தினை கல்வி அதிகாரிகள் முன்னுரிமைப்படுத்தல்.**

**பிரதான நடவடிக்கைகள்:**

- சட்டங்கள், நெறிமுறைகள் மற்றும் கொள்கைகள் கல்வி வசதிகள், ஊழியர்கள் மற்றும் கற்பவர்களின் நிலைமையை பாதுகாத்தல்.
- கல்விக்கான உரிமையை சட்டங்கள், நெறிமுறைகள் மற்றும் கொள்கைகள் மதித்தல், பாதுகாத்தல் மற்றும் பூர்த்தி செய்தல்.
- சட்டங்களும், நெறிமுறைகளும், கொள்கைகளும், கல்வி வசதிகள் பாதுகாப்பாக இருப்பதனை உறுதி செய்தல்.
- பங்கேற்பு சூழ்நிலை பகுப்பாய்வின் அடிப்படையில் சட்டங்களும், நெறிமுறைகளும், கொள்கைகளும் அமைதல் வேண்டும்.
- அவசர கால நிலைமைகளில் துரித பதிலளிப்புக்களுக்கு தேசிய கல்வி கொள்கைகள் துணை புரியும்.
- அகதிகளுக்கான பாடசாலைகள், அவர்களுடைய நாட்டின் பாடவிதானம் மற்றும் மொழியைப் பயன்படுத்துவதாக அமைதல்.

- அவசர கால நிகழ்ச்சிகளில் கல்வியை ஸ்தாபிப்பதற்கு அரசு சாரா துறைகளுக்கு அனுமதியளித்தல்.

**வழிகாட்டல் குறிப்புக்கள்:**

1. கல்விக்கான உரிமையை மதித்தல், பாதுகாத்தல் மற்றும் பூர்த்தி செய்தல் என்பனவே, தேசிய அதிகார சபையின் கடமையாகும்.
2. அனைவருக்குமான கல்வி தொடர்வதனை தேசிய கல்வி கொள்கைகளும், சட்டங்களும் உறுதி செய்தல் வேண்டும்.
3. புதிய மற்றும் மீளமைக்கப்பட்ட பாடசாலைகள் அனர்த்தங்கள் மற்றும் ஆபத்துக்களில் இருந்து காக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
4. சூழ்நிலைப் பகுப்பாய்வினை சட்டங்களும், கொள்கைகளும் உள்வாங்கல் வேண்டும்.
5. கொள்கை வகுப்பவர்கள் மத்தியில் நம்பகமான தகவல் முறைகள் மற்றும் தகவல் பரிமாறல்.
6. தேசிய அனர்த்த முன்னாயத்த வரைபு நகலின் அங்கமாக கல்வி அமைதல் வேண்டும்.
7. அனைத்து குழுக்களையும் சமமான வகையில் கல்வி எட்டுதல் வேண்டும்.
8. தேசிய கல்வி வழங்கலில் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் ஐ.நாவிற்கு அனுமதியளித்தல்.

## ■ *கல்வி கொள்கை தரம் 2: திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தல்*

**சர்வதேச மற்றும் தேசிய கல்வி கொள்கைகள், சட்டங்கள், தரங்கள் மற்றும் திட்டங்களையும், பாதிக்கப்பட்ட மக்கள் தொகையின் கற்றல் தேவைகளையும் கல்வி நடவடிக்கைகள் கவனத்தில் கொள்ள வேண்டும்.**

**பிரதான நடவடிக்கைகள்:**

- சர்வதேச மற்றும் தேசிய வரைபு நகல் மற்றும் கொள்கைகளை கல்வி நிகழ்ச்சிகள் பிரதிபலித்தல்.
- ஏனைய அவசர கால மறுசீரமைப்பு துறைகளுடன் கல்வி நடவடிக்கைகளை ஒன்றிணைத்தல்.
- பாரிய நீண்ட கால தேசிய கல்வி திட்டத்துடன் அவசர கால கல்வி இணைக்கப்படல்.
- எதிர்கால மற்றும் நடப்பு அவசரகால நிலைமைகளுக்கான தயாரிக்கப்பட்ட கல்வித் திட்டங்கள்.
- வினைத்திறன் மிக்க, வெளிப்படையான கொள்கை அபிவிருத்தி மற்றும் நடைமுறைப்படுத்தலுக்கு போதிய வளங்கள்.

**வழிகாட்டல் குறிப்புக்கள்:**

1. கல்வி உரிமைகள் மற்றும் இலக்குகளை கல்வி நிகழ்ச்சிகள் எட்டுதல் வேண்டும்.
2. ஏனைய துறைகளுடன் இணைக்கப்பட்ட கல்வி மறுசீரமைப்புக்கள்.
3. எதிர்காலத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை குறிக்கும் தேசிய மற்றும் உள்ளூர் கல்வி திட்டங்கள்.
4. நாடு தலைமையிலான வள ஒதுக்கீடு மற்றும் ஒருங்கிணைப்பு
5. நிதியிடலுக்கு வெளிப்படையான மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட அணுகுமுறைகள்.

***கல்விக்கான அடிப்படைத் தரங்கள்: முன்னாயத்தம், பதிலளிப்பு, மீட்சி*** **என்பது, சிறுவர்கள், இளைஞர்கள் மற்றும் பராயத்தினர் என அனைவரும் கல்விக்கான உரிமையைக் கொண்டுள்ளனர் என்ற உறுதிமொழியை வெளிப்படுத்துகின்றது. கல்வி தரத்தின் அடிப்படை மட்டம் மற்றும் மீட்சியின் ஊடாக அவசர கால நிலைகளில் அணுகும் வசதி என்பவற்றை தரங்கள் விளக்குகின்றன. 2003-2004 காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட கலந்தாய்வின் மூலம் வடிவமைக்கப்பட்டு, 2009-2010 காலப்பகுதியில் அவை திருத்தத்திற்கு உள்ளாக்கப்பட்டன. சிறுவர்களின் உரிமைகளுக்கான சமவாயம், டாகார் (Dakar) 2000 அனைவருக்கும் கல்வி, ஸ்பியர் திட்டத்தின் மனிதநேய சாசனம் என்பவற்றின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது..**




**INEE அடிப்படைத் தரங்கள் கைநூலினை உள்வாங்கியதாக INEE அடிப்படைத் தரங்கள் குறிப்புதவி கருவி உருவாக்கப்பட்டுள்ளது. தரங்களினை பிரயோகித்தல், நிறுவனமயப்படுத்தல் மற்றும் சூழ்நிலைப்படுத்தல் என்பன சார்ந்து செயற்படும் மக்களுக்கு எளிதான பயிற்சி கருவியாகவும், INEE அடிப்படைத் தரங்கள் சார்ந்த இலகுவான குறிப்புதவிகளை தருவதாகவும் அது அமைந்துள்ளது. மேலதிக தகவல்களுக்கு விஜயம் செய்யுங்கள்: www.ineesite.org/standards.**

**கல்வி நிகழ்ச்சிகள் அல்லது கொள்கைகளை வலுப்படுத்துவதற்கு, INEE அடிப்படைத் தரங்களை நீங்கள் எவ்வாறு பயன்படுத்தினீர்கள் என்பதனை பகிர்ந்து கொள்வதற்கு, அடிப்படைத் தரங்கள் தொடர்பான INEE ஒருங்கிணைப்பாளரை தொடர்பு கொள்ளுங்கள்: minimumstandards@ineesite.org.** உங்கள் கருத்துக்களை வரவேற்கின்றோம்.

**INEE அடிப்படைத் தரங்கள் கைநூல், அடிப்படைத் தரங்கள் குறிப்புதவி கருவி மற்றும் INEE கருவித்தொகுதியினைப் பெற்றுக் கொள்வதற்கு தொடர்பு கொள்ளுங்கள்: materials@ineesite.org.**

**அவசரகால நிலைமைகளில் கல்விக்கான நிறுவனங்களுக்கு இடையிலான வலையமைப்பு (INEE), என்பது தரமான கல்விக்கான அனைத்து மக்களினதும் உரிமைகளை உறுதி செய்தல் மற்றும் அவசர கால நிலைமைகள் மற்றும் மோதலுக்குப் பின்னரான மீட்சியில் பாதுகாப்பான கற்பித்தல் சூழலை உறுதி செய்தல் என்பன தொடர்பில் ஒன்றிணைந்து செயற்பட்டு வரும் செயற்பாட்டாளர்கள் மற்றும் கொள்கை வகுப்பவர்களை உள்ளடக்கிய திறந்த, உலகளாவிய வலையமைப்பாகும். www.ineesite.org**

**INEEஇல் இணைந்து கொள்வதற்கு: www.ineesite.org/join**

**உறுப்பினராகி, இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை ஆவணங்களைப் பெற்று, எமது சமூகத்திற்கு பங்களியுங்கள்!**

INEE Inter-Agency Network for Education in Emergencies
හදිසි අවස්ථාවන්හිදී අධ්‍යාපනය ලබාදීම පිළිබඳ අන්තර් ආයතන ජාලය
அவசர கால நிலைகளில் கல்விக்கான நிறுவனங்களுக்கு இடையிலான வலையமைப்பு

# வரைபடம்

## கல்விக்கான அடிப்படைத் தரங்கள்: *முன்னாயத்தம், பதிலளிப்பு, மீட்சி*

### ஆரம்ப தரங்கள்

**சமுதாய பங்கேற்பு தரங்கள்:** பங்கேற்பு மற்றும் வளங்கள் - **ஒருங்கிணைப்பு தரங்கள்:** ஒருங்கிணைப்பு - **பகுப்பாய்வு தரங்கள்:** மதிப்பீடு, பதிலளிப்பு உபாயங்கள், கண்காணித்தல் மற்றும் மதிப்பீட்டாய்வு

### அணுகும் வசதி மற்றும் கற்றல் சூழல்

**தரம் 1: சமமான அணுகும் வசதி** - தரமான மற்றும் பொருத்தமான கல்வி சந்தர்ப்பங்களுக்கும் அனைத்து தனிநபர்களுக்கும் அணுகும் வசதி. வசதியை கொண்டிருத்தல்.

**தரம் 2: பாதுகாப்பு மற்றும் நலன்** - கற்றல் சூழல் பாதுகாப்பானதாக இருத்தல், மற்றும் கற்பவர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஏனைய கல்வியியலாளர்களின் பாதுகாப்பை மேம்படுத்துவதுடன், உளச்சமூக நலனையும் மேம்படுத்தல்.

**தரம் 3: வசதிகள் மற்றும் சேவைகள்-** கற்பவர்கள், ஆசிரியர்கள் மற்றும் வேறு கல்வியியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் நலனை கல்வி வழங்கும் இடங்கள் மேம்படுத்தல் வேண்டும். அத்துடன், சுகாதார, ஊட்டச்சத்து, உளச்சமூக மற்றும் பாதுகாப்பு சேவைகளுடன் இணைக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

### கற்பித்தல் மற்றும் கற்றல்

**தரம் 1: பாடவிதானம்** - கற்பவர்களின் குறிப்பிட்ட சூழ்நிலை மற்றும் தேவைகளுக்கு பொருத்தமான முறைசார் மற்றும் முறைசாரா கல்வியை வழங்கும் போது, கலாசார ரீதியான, சமூக ரீதியான மற்றும் மொழி ரீதியான சம்பந்தப்பட்ட பாடவிதானங்களை பயன்படுத்தல்.

**தரம் 2: பயிற்சி, தொழில்சார் அபிவிருத்தி மற்றும் ஆதரவு** - தேவைகள் மற்றும் சூழ்நிலைகளுக்கு அமைய கற்பிப்பவர்களும், ஏனைய கல்வியியலாளர்களும் பருவகால, சம்பந்தப்பட்ட மற்றும் கட்டமைக்கப்பட்ட பயிற்சிகளைப் பெறல்.

**தரம் 3: அறிவுறுத்தல் மற்றும் கற்றல் செயற்பாடு** - அறிவுறுத்தலும், கற்றல் செயற்பாடுகளும், கற்பவர்களை பிரதானமாகக் கொண்ட, பங்கேற்பு ரீதியான, உள்ளடக்கமானதாக இருத்தல்.

**தரம் 4: கற்றல் வெளியீடுகளின் மதிப்பீடு** - கற்றல் வெளியீடுகளை மதிப்பீடு செய்வதற்கு மற்றும் சரிபார்த்தலுக்கு பொருத்தமான முறைகள் பயன்படுத்தப்படல்.

### கற்பிப்பவர்கள் மற்றும் வேறு கல்வியியலாளர்கள்

**தரம் 1: ஆட்சேர்ப்பு மற்றும் தெரிவு** - பல்வகைத் தன்மை மற்றும் சமத்துவத்தினைப் பிரதிபலிக்கும் தெரிவு செய்தல் பிரமாணத்தின் அடிப்படையில், பங்கேற்பு மற்றும் வெளிப்படையான செயற்பாட்டின் ஊடாக பொருத்தமான வகையில் தரமான கற்பிப்பவர்கள் மற்றும் வேறு கல்வியியலாளர்கள் போதிய எண்ணிக்கையில் இணைக்கப்படல்.

**தரம் 2: தொழில் நிபந்தனைகள்** - தெளிவாக விளக்கப்பட்ட தொழில் நிபந்தனைகளை கற்பிப்பவர்களும், வேறு கல்வியியலாளர்களும் கொண்டிருப்பர். அத்துடன், பொருத்தமான கொடுப்பனவும் வழங்கப்படல்.

**தரம் 3: ஆதரவு மற்றும் மேற்பார்வை** -கற்பிப்பவர்களும், வேறு கல்வியியலாளர்களும் வினைத்திறன் மிக்க வகையில் செயற்படுவதற்கு ஆதரவு மற்றும் மேற்பார்வை பொறியமைப்புக்கள்.

### கல்வி கொள்கை

**தரம் 1: சட்டம் மற்றும் கொள்கை உருவாக்கம்** - பாடசாலைகளுக்கான இலவசமான மற்றும் உள்வாங்கப்படுதலுடனான அணுகும் வசதி உள்ளடங்கலாக, தரமான கல்வியின் தொடர்ச்சி மற்றும் மீள்கட்டுமாணத்தினை கல்வி அதிகாரிகள் முன்னுரிமைப்படுத்தல்.

**தரம் 2: திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தல்** - சர்வதேச மற்றும் தேசிய கல்வி கொள்கைகள், சட்டங்கள், தரங்கள் மற்றும் திட்டங்களையும், பாதிக்கப்பட்ட மக்கள் தொகையின் கற்றல் தேவைகளையும் கல்வி நடவடிக்கைகள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**பிரதான கருப்பொருள் விடயங்கள்:** முரண்பாடு தணித்தல், அனர்த்த அபாயக் குறைப்பு, துரித முன்பள்ளி அபிவிருத்தி, பால்நிலை, எச்.ஐ.வி மற்றும் எய்ட்ஸ், மனித உரிமைகள், உள்வாங்கப்படல் சார்ந்த கல்வி, துறைகளுக்கு இடையிலான இணைப்பு, பாதுகாப்பு, உளச்சமூக உதவி, மற்றும் இளைஞர்

**INEE**

Inter-Agency Network for Education in Emergencies

හදිසි අවස්ථාවන්හිදී අධ්‍යාපනය ලබාදීම පිළිබඳ අන්තර් ආයතන ජාලය

அவசர கால நிலைகளில் கல்விக்கான நிறுவனங்களுக்கு இடையிலான வலையமைப்பு

# INEE அடிப்படைத் தரங்கள் குறிப்புதவி கருவி

## INEE அடிப்படைத் தரங்கள் கைநூலை இணைத்துக் கொள்வதற்கும், உசாத்துணை செய்வதற்கும்




அடிப்படைத் தரங்கள் தொடர்பான INEE செயற்குழுவினால் தயாரிக்கப்பட்டது.